**ஜனவரி - 28**

**"ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவ புஸ்த்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல் என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்." - வெளி 3:5**

விசுவாசத்தோடு ஜெயங்கொள்ள வேண்டும் என்று வருபவர்கள் விழிப்புடன் இருப்பார்கள். அவர்கள் தங்கள் அங்கிகளில் கறைபடாதவாறு பாதுகாத்துக் கொள்ளுவார்கள். இவ்வுலக வாழ்விலிருந்து வரும் இவர்கள் இத்தகைய குறைகள் அண்டாதவாறு கவனமாக இருப்பார்கள். "அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கறைப்படுத்தவில்லை. இவ்வுலகில் இருந்து வந்த அவர்களுடைய வஸ்திரங்களில் கறைபடாதபடி காத்துக்கொண்டார்கள். பாவம் அவர்களைத் தீட்டுப்படுத்த அனுமதிக்கவில்லை. தேவனிடத்திலிருந்து அவர்களைப் பிரிக்க அவர்கள் பாவத்திற்கு இடம் கொடுக்கவில்லை. அதற்குப் பகரம் விலையுயர்ந்த அவருடைய பரிசுத்த ரத்தத்தை அதி விரைவில் பெற்று அதனைப் பயன்படுத்தித் தங்களில் இருந்த ஒவ்வொரு கறைகளையும் அகற்றிப் போட்டார்கள். அவர்கள் முழு மனதுடன் பாவத்தை எதிர்க்கிறார்கள். தங்கள் வஸ்திரம் கறைபடாது இருக்க மிகவும் அக்கறையுடையவர்களாக இருக்கிறார்கள். இதனால் சத்துருவாகிய சாத்தான் பற்றிப்பிடிக்க இயலாதவனாக இருக்கிறான். பொல்லாங்கானவன் அவர்களைப் பிடிக்க இயலாது. இவைகள் அத்தனையும் எதைக்காட்டுகிறதென்றால், இவர்கள் பரிபூரணமாக தங்கள் சித்தத்தை கிறிஸ்துவின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்குள் மரித்திருக்கிறார்கள். எனவே இவர்கள் மனப்பூர்வமாகப் பாவம் செய்வது கிடையாது. **- Z ’97, 161 (R 2159).**

ஜெயம் கொள்ளுகிறவன் ஓர் உன்னத நிலையைப் பற்றிப்பிடிப்பான். ஒரு களங்கமும் மற்றப் பண்பினைப் பெற உறுதி கொண்டிருப்பான். நியாயப்பிரமாணங்களை நிறைவேற்றுவதன் மூலம் பெறக்கூடிய உயர்ந்த குணநலங்களை அவன் அடைந்திருப்பான். அத்தகைய உயர்ந்த குணங்களை பெற்ற அவனிடத்திலிருந்து ஒன்றையும் அகற்றிட முடியாது. அதற்கு மாறாக அவன் குமாரனால் போற்றப்படுவான். பிதாவின் முன்பாகவும் அவருடைய பரிசுத்த தூதர்கள் முன்பாகவும் குமாரன் அவன் நாமத்தை அறிக்கையிடுவார். அது அவனுக்கு தேவனுடைய ராஜ்யத்தில் தன்னை தகுதியாக்கிக் கொள்வதற்குக் கிடைக்கும் உயர்ந்த மதிப்பும், பணியும், வெகுமதியுமாக இருக்கும். சங்கீதக்காரன் கூறுவது போல, அவன் இருதயம் சதாகாலத்திற்கும் ஜீவித்திருக்கும். **- P ’31, 192.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1இராஜா 19:18; எசே 9:4; எபே 5:25-27; வெளி 19:8; சங் 45:14; மத் 7:21; வெளி 12:11; நெகே 13:14; யாத் 32:32,33; சங் 69:28; வெளி 21:27; 13:8; 17:8; பிலி 4:3; மத் 10:32; லூக் 12:8; மத் 25:21.

**கோபுர வாசிப்பு :** Z ’15, 118 (R 5668)

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவங்களும் நம்பிக்கைகளும் என்ன? அவை எவற்றில் முடிந்தன?